Registered No. M. 1014.

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை க.	1913-ம் ஆ௵ ஏப்ரல் மீ	இதழ் ச.

பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

வருஷ சந்தா ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
தபாற் கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

Sinnaya Press, Pondicherry

70

உள்ளுறை.

பக்கம்.

சரீரப் பயிற்சி: — சுவாமிநாத தீக்ஷிதர் 1

பால சிக்ஷை:- ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I., புதுவை. 4

சித்தூர் பத்மாவதி இராணி: — ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர், முத்தியாலுப்பேட்டை. 6

பொறுமை:—முத்துமாணிக்க செட்டியார், உபாத்தியாயர், ஆற்காடு... 10

தமிழில் ஓர் புதிய அகராதி: — தி. வெங்கடராம ஐயங்கார், தமிழ்ப் பண்டிதர், பென்ஷன்தார். 12

மணிமேகலை: — பத்திராதிபர். 14

மயிலைச் சிலேடை வெண்பா: — ஸ்ரீமத் வித்வான் பு. அ. பெரியசாமிப் பிள்ளை. 16

தொல்காப்பியம்: — பத்திராதிபர். 18

மங்கலம்: — வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பைய சுவாமிகள். 21

சுஜன சம்வாதம்: — ஆ. செங்கல்வராய முதலியார் காஞ்சீபுரம். 22

மநீஷா பஞ்சகம்: — பத்திராதிபர். 24

To Let.

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௧.] 1913-ம் ௵ ஏப்ரல் மீ [இதழ் ௪.

இலௌகிகப் பகுதி.

சரீரப் பயிற்சி.

(தொடர்ச்சி)

முந்திய சஞ்சிகையில் சரீரப் பயிற்சி பயிலும் முறைகளையும் அதனால் உண்டாகும் நன்மைகளையும் ஆராய்வதாய்ச் சொல்லி முடித்தோம். "ப்ரயோஜனம் அநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே" என்றபடி, நாம் செய்யும் காரியத்தினால் நமக்கு என்ன நன்மை உண்டாகும் என்று ஆராயாது மூடனும் ஒரு வேலையை ஆரம்பிக்கமாட்டான். ஆகவே நாம் அடையவேண்டிய நன்மை இன்னதென உணர்ந்து அதற்குத் தக்க வழிகளை அநுசரித்து முயல்வதே வெற்றிபெறும் வகையாகும். ஆதலின் நாம் தேகப்பயிற்சியினால் உண்டாகும் நன்மைகளைத் தெரிந்துகொண்டு அதற்கு அநுகுணமான விளையாட்டுகளைத் தக்க முறைகளால் பயிலவேண்டும்.

தேகப் பயிற்சியினால் உண்டாகும் நன்மைகள் பல. அது தேகத்தை நன்றாய் வளரச்செய்கிறது. மேலும் சுகக் கேட்டைக் கொடுக்கும் விஷயங்களின் கொடுமையைக் குறைத்து, தேகத்தை நமது புத்திக்குத் தகுந்த பாத்திரமாக்குகின்றது. தேகத்தை அநித்தியமென நிந்தித்துப் பட்டினி கிடந்தும் ஆகாரத்தை ஒடுக்கியும் காயக்கிலேசஞ்செய்தும் தான்

ஞானத்தைப் பெறவேண்டுமென எண்ணி மெய்யை அவமதித்து வருத்
திய காலம் அநேகமாய்ப் போய்விட்டது. இக்காலத்திலோ தேக பல
மும் மனோ பலமும் இல்லார்க்கு இவ்வுலக மில்லையென்பது உலகமெங்
குந் தற்காலம் நடந்துவரும் நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் மூலமாய்ப்
படித்துவரும் ஒவ்வொருவரும் அறியாமலிரார். அப்படியிருக்க மனோ
பலத்திற்கும் ஆதாரமாயிருக்குந் தேக பலத்தை ஒவ்வொருவரும் அடைய
முயலுவது அவசியமாகும். இதுவுமல்லாமல் தேகப் பயிற்சியானது
நம்மை நீதிமார்க்கத்தில் செலுத்தி நமக்கு ரஸஞானத்தையும் கொடுக்
கின்றது. நன்றாய் அறிந்து தேகப் பயிற்சி செய்தால் பொருள்களின்
ரம்மியதையையும் சலனங்களின் பொருத்தத்தையும் செவ்வனே உண
ருந் திறமை பிள்ளைகளுக்கு உண்டாகிறது. இந்தச் சக்தி இருந்தால்
தாங்கள் கெட்ட நிலைமையிலிருக்குங் காலத்தில் அது அநேகமாய்த்
தேக சௌக்கியத்திற்கும் அழகிற்கும் விரோதப்பட்டிருக்குமாதலால்
அதினின்றும் விலக்கிக்கொள்ளக்கூடும். மேலும் விளையாட்டினாலேயே
ஊக்கம் பொறுமை மனோதைரியம் பொதுநலங்கருதுதல் தலைவனுக்
குக் கீழ்ப்படிதல் முதலிய பல நற்குணங்களும் உண்டாகின்றன. இக்
குணங்களைப் பெற்றால் பிறகு தங்கள் பலத்தை உபயோகித்துத் தாங்களே
ஒரு காரியத்தைத் தொடங்கிச் செய்யவும் பிறரோடு ஒத்து வாழவும்
வேண்டிய சக்தியும் பிரியமும் உண்டாகும்.

இந்த நன்மைகளையெல்லாம் நமது பிள்ளைகள் அடையவேண்டு
மென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆகவே அவைகளை
அவர்களடைய நாம் என்னசெய்யவேண்டும்? விளையாட்டுக்காலத்தில்
தான் அவர்களை நன்றாய்ப் பயிற்ற இடமிருக்கிறது. அவர்கள் தொடங்
கிய விளையாட்டைக் கெடுக்காமலே அவர்களைச் சரியாய் விளையாடச்
செய்து எற்ற வழியில் செலுத்தவேண்டும். முன் சொல்லியபடி நம்
தேசத்தில் தொன்றுதொட்டு விளையாடிய நல்ல விளையாட்டுகள் எத்
தனையோ இருக்கின்றன. அவ்விளையாட்டுகளை இன்றும் நவீன நாகரிகம்
பாவாத நாட்டுச் சிறுவர்கள் விளையாடிப் பட்டண வாசிகளான பாலரைக்
காட்டிலும் அதிக பலமும் ஆரோக்கியமு முடையவர்களாயிருக்கின்றா
கள். பெரியோர்களும் இச் சிறுவர்களுக்கு வழிகாட்டி உற்சாகப்ப
துவதற்கென்றே சிற்சில காலங்களில் அவ் விளையாட்டுக்களை விளைய
வார்கள். உதாரணமாக, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சில கிராமங்கள்
இன்றும் ஓர் வழக்கம் இருந்து வருகிறது. அதாவது தை மாதம் முத
நாளாகிய பொங்கல் தினத்திற்கு அடுத்த மாட்டுப்பொங்கல் கரிநாள்
ஆகிய இரண்டு நாட்களிலும் சிறியோர் பெரியோர் எல்லாருஞ் சாயங்

காலம் நான்கு மணிக்குமேல் ஆற்று மணலிலும் வேறு மணற்பாங்கான இடங்களிலும் பலின்சடுகுடு அடித்தல் முதலிய விளையாட்டுகளை அநேக பிரிவுகளாய்ப் பிரித்து ஆடுவதும் விளையாடாத சிறுவர்களும் சிறுமிகளும் இக் கிழவர்கள் குதித்து விளையாடுங் காக்ஷியைக் கண்டு ஆநந்திப்பதும் வழக்கமாயிருக்கிறது. இன்னும் இதுபோன்ற ஏனைய விளையாட்டுகளையும் விளையாடுவதில் கௌரவக் குறைவில்லையென்று அறிந்துகொண்டு நவீன விளையாட்டுகளோடு இவைகளையும் நஞ்சிறுவர் கைக்கொள்ளல் வேண்டும்.

மேலும் விளையாட்டுகளெல்லாம் பிள்ளைகள் தங்கள் வாழ்நாளில் செய்ய உத்தேசிக்குந் தொழில்களிலும் அவர்களைப் பயிற்றுவிக்கும் வழிகளாகும். வெகுதூரம் நடத்தல் குன்றேறுதல் நீர் நிலைகளில் நீந்துதல் முதலியன பயிரிடுவோருக்கு எவ்வளவு நன்மை பயக்கக்கூடியன!

உபாத்தியாயர் பள்ளிக்கூட அப்பியாசங்களைச் சிறுவர்கள் வயதிற்கும் பலத்திற்கும் மனோதர்மத்திற்குந் தக்கவாறு நியமிக்கவேண்டும். ஆரம்பத்தில் கவாத்து ஜிம்னாஸ்டிக்ஸ் முட்டியுத்தம் சிலம்பம் பழகுதல் முதலியவை பயன்படும். பிறகு வயதுசென்ற பிள்ளைகள் உபாத்தியாயர் உதவியுங் கண்காணிப்புமின்றியே சுதேசிய விதேசிய விளையாட்டுகளைத் தெரிந்தெடுத்து விளையாடவேண்டும்.

இதுகாறும் நாம் நமது சிறுவர்களைப்பற்றியே பேசினோம். ஆகிலும் நமது பெண்பிள்ளைகளுக்குந் தேகப்பயிற்சி அவசியமானதென்பதை மறந்துவிடக்கூடாது. அவர்களுக்கு அதிக சிரமமுள்ள அப்பியாசங்களைக் கொடுக்காமல் பெண் தன்மைக்கும் குடும்ப ஸம்ரக்ஷணத்திற்கும் பொருத்தமான விளையாட்டுகளையே நியமித்தல் வேண்டும்.

சுருங்கச் சொல்லின் சிறுவர்கள் பாடசாலையில் இருக்கும்போது அவர்களுக்குச் சிறுகச் சிறுகப் படிப்படியாய் முந்தியே ஜாக்கிரதையுடன் ஆயத்தஞ்செய்துவைத்த தேக அப்பியாசங்களைக் காலம் வயது முதலியவைகளுக்கேற்ற கருவிகளைக்கொண்டு செய்வித்து, கேவலம் தசை நார்களை மாத்திரம் வளரச்செய்யாது தேக சௌக்கியத்தையும் பலத்தையுங் கொடுக்கும் பயிற்சியே விரும்பத்தக்கதென நன்குணர்ந்தும், தேகப் பயிற்சியும் ஒரு சாத்திரமெனக் கருதியும், புத்தியைப் பயிற்றும் விஷயங்களைக் கவனிப்பதுபோல் இதற்குரிய போதனைமுறைகளையுங் கவனித்து, நமது உபாத்தியாயர்கள் நடத்துவார்களானால், சிறுவர்கள் பள்ளியை விட்டு நீங்கிய பின்னரும் தேகப் பயிற்சியை மறவாது கைக்கொண்டு

பலாட்டியர்களாகித் தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்து தேச க்ஷேமத்திற்கும் உதவிபுரிவார்கள் என்பது திண்ணம்.

சுவாமிநாத தீக்ஷிதர்.

பால சிக்ஷை.

௪-வது அத்தியாயம்

முதல் வயது.

இவ் வயதில் அநுசரிக்கவேண்டிய சுகாதார முறைகளும், ஆயுர்வேத விதிகளும்.

(தொடர்ச்சி.)

நித்திரை.

நித்திரை சரீர சுகத்திற்கு இன்றியமையாததென்பது யாவருமறிந்த விஷயம். பண்டைக்காலத்தில் கொடுங்கோன் மன்னர் கடுங்கொலை புரிதற்கு ஆராய்ந்தெடுத்துள்ள குரூர உபாயங்களில், மனிதர்களை நித்திரைசெய்யாமல் தடுத்து வதைத்தல் ஒன்றாகும்.

ஒருவனை இமைப்பொழுதும் கண்ணுறங்கவிடாமல் பலவாற்றானும் இம்சித்துவரின், அவன் இரண்டொரு வாரங்களில் சித்த சுவாதீனமற்றும், ஒரு மாதத்திற்குள் சகிக்கொணாத் துன்பத்தோ டிறந்தும்போவானும்.

பகலெல்லாம் நீரிறைத்து வற்றிய மணற் கேணியில் இரவில் நீர் சுரப்பதுபோல் பகலெல்லாம் உழைத்துக் களைத்த உடற்கு நித்திரையே பலத்தையுஞ் சுகத்தையுங் கொடுக்கும்.

பெரியவர்களைவிடக் குழந்தைகட்கு நித்திரை அத்தியாவசிகம். பெரியோர் 24 மணி நேரத்தில் 6 மணி நேரத்திற்குக் குறையாமலும், 8 மணி நேரத்திற் கதிகப்படாமலும் நித்திரை செய்யவேண்டும். குழந்தைகளோ பிறந்த முதல் மாதத்தில் இராப் பகல் ஒரு நாளில் 16 மணி நேரமும், இரண்டா மாத முதல் ஆறு மாதம் வரையில் 14 மணி நேரமும், பிறகு ஆறு மாத முதல் ஒரு வயது வரையில் 12 மணி நேரமும் இயல்பாக நித்திரை செய்கின்றன. இது குழந்தைகளின் பொதுவான நித்திரை யளவு.

ஆகவே குழந்தைகள் போதியவரையில் சுகமாகவும் அமைதியாகவுங் கண்வளர ஏற்ற சாதனஞ்செய்வது தாயர்களின் முக்கிய கடமை. பறவைகள் மிருகங்கள் முதலாகத் தத்தங் குழவிகள் சுகமாக நித்திரை செய்யத் தமது கூடுகளில் நார் இலை பஞ்சு தூவி முதலியவற்றால் மிருதுவான சயனங்கள் அமைத்துவைக்கின்றனவன்றோ!

சுகமாகக் கண்ணுறங்கக் குழந்தைகளைப் பிரத்தியேகமான மெல்லிய சயனங்களில் கிடத்தவேண்டும். தாய் சிசுவைத் தன் அருகில் படுக்கவைத்து உறங்குவது தவறு. ஏனெனில், நித்திரையில் சிற்சில சமயங்களில் தன் வசமற்றவளாய்ப் புரள்வதினால் குழந்தைக்கு உயிர்ச்சேதமும் சம்பவிக்கக்கூடும். அன்றியும் தாய் சுவாசித்து அசுத்தமடைந்த ஆகாயத்தையே குழந்தையும் சுவாசிப்பதினால் சுகவீனமும் உண்டாகும்.

ஏணை ஊசல் முதலிய ஆடுஞ் சயனங்களில் கிடத்துவதினால் குழந்தைகட்கு அமைதிக்குறைவும், மூளைக்குக் கலக்கமும் ஏற்படுகின்றன. அன்றியும் அச்சயனங்களில் ஆடப் பழக்கப்படுத்துவதினால் குழந்தைக்கும் தாய்க்கும் நித்திரை பங்கம் விளைகின்றது.

இவ்வித தாரப்பியாசத்துக் குட்படாக் குழந்தை நிம்மதியாக உறங்கிவிடும். நித்திரை பங்கம் செய்துகொண்டு அழாது. அழுதாலோ பசி, ஜல மல விசர்ஜ்ஜனமும், கொசு எறும்பு முதலிய செந்துக்களின் உபத்திரவமுமே அதற்குக் காரணமாகும். காரணத்தை நீக்க உடனே நித்திரைசெய்யும்.

பசுங் குழவியைச் சயனத்தில் மல்லாக்காய்க் கிடத்திவைக்கலாகாது. ஏனெனில், சில சமயம் குடித்த பால் புளித்து வாந்தி செய்யும்போது அப்பாற்கட்டிகள் வெளிவர ஏதுவின்றித் தொண்டையில் அடைத்துக்கொண்டு சுவாச தம்பனமாவதினால் உயிர்ச்சேதமு முண்டாகுமாம். ஆதலால் குழந்தையைச் சிறிது நேரம் வலதுபக்கமாகவும் சிறிது நேரம் இடதுபக்கமாகவும் மாற்றி மாற்றி ஒருகணித்துக் கிடத்தல் உத்தமம்.

மேற்கூறியவாற்றால் நித்திரை குழந்தைகளின் சுகாதாரத்துக்கு இன்றியமையாததென்பது இனிது பெறப்படுகின்றதாதலின், குழந்தைகள் அமைதியாக நித்திரைசெய்யவேண்டிய விஷயத்தில் பெற்ற தாயர்கள் பெரிதும் கவலையெடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(இன்னும் வரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

சித்தூர் பத்மாவதி இராணி.

இராஜபுதனத்திலுள்ள சித்தூர் என்பது பார்க்கத்தகுந்த அழகான ஓர் பட்டணம். அதன் புகழ்பெற்ற கோட்டை ஒரு தனிமையான நீண்ட பாறையாகவிருக்கின்றது. குன்றின்மேல் பார்க்கத்தகுந்த சில பழைய வீடுகளும் கோயில் குளங்களுமிருக்கின்றன. அதிர்ஷ்டமாகிய புன்னகையுள்ள சூரியன் சித்தூரின்மேல் பிரகாசிப்பதை நிறுத்திவிட்டான். அதனுடைய பிரகாசமான நாட்களெல்லாஞ் சென்றுவிட்டன. அவ்விதமே அறிவும் அழகும் பொருந்திப் புருஷனிடம் பிறழாப்பற்றுடைய கீர்த்திபெற்ற இராணியுஞ் சென்றனள். பெரிய அரண்மனைகளும், மகத்தான மகுடமன்னர்களும் இருந்தவிடங்ளெல்லாம் நிர்மூலமாய்க் காணப்படுகின்றன. இவையாவுங் காலத்தின் கோலமல்லவா? எனினும், நற்செயல்கள் ஒருபோதும் மறைந்துபோய் விடுவதுமில்லை, அந்தகாரத்தில் அமிழ்ந்துகிடப்பதுமில்லை.

பத்மாவதி சிங்கலத்வீபத்தின் அரசனாகிய ஹமீர்ஸிம்மனுடைய மகள். அவள் குழந்தைப் பருவத்தில் மிகப் பிரகாசமாகவும் புத்திசாலியாகவுமிருந்து அதிசீக்கிரத்தில் எல்லாவற்றையுங் கற்றுக்கொண்டாள். அவள் அழகும் அறிவுங் கீர்த்தியுந் தேசமெங்கும் பரவ, அநேக இராஜாக்கள் அவளை மணக்க முயன்றனர். கடைசியாக, சித்தூர் பீமஸிம்மராணா அவள் புகழைக் கேள்விப்பட்டு ஸிம்மலத்வீபஞ்சென்று அவளைக் கலியாணஞ் செய்துகொண்டான்.

டில்லி அரசனாகிய கில்ஜி வம்சத்தைச் சேர்ந்த ஷா அலாவுடீன் இராணி பத்மாவதியின் அழகைப்பற்றிக் கேள்வியுற்று இத்தகைய அருமையான ஸ்திரீரத்னத்தையடைய அடங்கா ஆவல்கொண்டு தனது துஷ்ட வேண்டுகோட் கிணங்க அவளைக் கெஞ்சி அவளுக்கோர் கடிதமெழுதினான். அதற்கு மிகப் பெருந்தன்மையுள்ள அவ்விராணி, மற்றொருவனுக்குச் சொந்தமானதை ஒரு யோக்கியன் ஒருபோதும் விரும்பான் என்றனுப்பிய பதிலை யறிந்த அலாவுடீன் கடுஞ் சினங்கொண்டு தன் பட்டாளத்தைத் திரட்டிச் சித்தூரை நோக்கிச் சென்று அதன் அந்தமான கோட்டையை அதே க்ஷணத்தில் அதஞ்செய்ய வாரம்பித்தான். இராஜபுத்திரர்கள் அதிதீரமாய்ப் போர்புரிந்து ஷாவை முற்ற முறியடித்தார்களானாலும் அதேகாலத்தில் அத்தேசமெங்கும் பஞ்சம் பரவியிருந்ததனால் ஷாவுடன் சமாதானஞ் செய்துகொள்வதே தகுதியென்று ராணா நினைத்தான். அதனால் அவன் அலாவுடீனைத் தன்னுடன் சமாதான

வுடன்படிக்கை செய்துகொள்ளும்படி எழுதிக் கேட்டான். அதற்கு அலாவுடீன், ராணா தன் பெயர்பெற்ற இராணியை ஒருதடவை மாத்திரம் தன்னைப் பார்க்கவிட்டால் தான் திருப்தியடைந்து தன் விராஜ்யத்திற்குத் திரும்பிப் போய்விடுவதாகச் சொன்னான்.

இதைக் கேட்டவுடனே ராணாவுக்கு மிகுதியுங் கோபமுண்டாகித் தன் பத்தினியைப் பரபுருஷன் பார்ப்பதைவிட எல்லாவற்றையு மிழந்துவிடுவதே தகுதியெனத் தீர்மானித்துக் கிலேசமுற்றிருந்தான். பத்மாவதி தன் பதியின் விசனகரமான முகத்தைப் பார்த்து அதற்கு முகாந்தரம் யாதென்று வினவ, ராணா நடந்த செய்தியை யவளுக் கறிவித்தனன். ஷா என்னைப் பார்க்கவேண்டுமென்று பிடிவாதஞ் செய்தானால் அவன் நிலைக்கண்ணாடியில் என்னிழலைப் பார்ப்பதனால் யாதொரு தீங்குமில்லை. பிறகு அவன் சமாதானஞ் செய்துகொண்டு தன் தேசத்திற்குத் திரும்பிவிடுவான். நமது தேசம் க்ஷேமமாயிருப்பதுடன் நமது மானத்திற்கும் யாதொரு பங்கமும் நேரிடாதென்று பத்மாவதி சொன்ன பதிலைக் கேட்ட ராணாவுக்கு அளவிலா வானந்தமுண்டாயிற்று. உடனே தன் னரண்மனைக்கு வரவேண்டுமென்று ஷாவைக் கேட்டுக்கொள்ள அலாவுடீன் ஆவலுடன் அவசரமாய் அரண்மனையை அடைந்து நிலைக்கண்ணாடியில் பத்மாவதியைப் பார்த்துப் பரவசமாயினன். இதோடு திருப்தியடைவதற்குப் பதிலாக அவனதாவல் மேன்மேலு மதிகரித்து எவ்வித வாபத்து வந்தபோதிலும் அவ்வழகியை அடையவேண்டுமென்று தீர்மானித்தான். சண்டையிடுவது புத்திசாலித்தனமாகாதென்று நன்றாயறிந்த அலாவுடீன் இனி நாம் நல்ல நேசர்களா யிருப்போமென்று பீமஸிம்மனிடஞ் சொல்லி அரண்மனையைவிட் டகன்றான். அவனது வஞ்சக வார்த்தையை நம்பிய ராணா தனியாய் அவனைத் தொடர்ந்து கோட்டைக்கு வெளியே செல்ல, ஷா அவனுடன் இனிமையாய்ப் பேசித் தன் கூடாரமட்டு மவனை யேமாற்றி யழைத்துச் சென்று அங்கே சிறைப்படுத்தினான்.

இந்தத் துக்ககரமான செய்தி ராணிக்குத் தெரிந்தவுடன் அவள் மிகுந்த திகிலடைந்தாள். ஆனால் அழுகை காயத்தை சொஸ்தப்படுத்தாதென்று அவளுக்கு நன்றாய்த் தெரியுமானதனால் துரிதமாகப் பயன்தரக் கூடிய உபாயங்களைக் கண்டுபிடிக்கத் தன் மந்திரிகளோடும், சுற்றத்தாரோடும் ஆலோசனை செய்தாள். அவளுடைய அமைச்சர்களும் பந்துக்களும் ஆச்சரியப்படத்தக்கதோர் சூழ்ச்சி அவள் மனதில் தோன்றியது. அதனால் அவள் ஷாவினிடம் அன்றிரவு வருவாளென்றும், அவள் புருஷனை ஒருமுறை மாத்திரம் பார்க்கவிட்டால் அன்று முதல்தான் ஷாவுக்

குரியவளாகவே யாவாளென்றும், தன்னுடன் வரும் ஆயிரம் வேலைக்காரிகளையும் ஷாவின் மனிதர்கள் அவமானப்படுத்தக்கூடாதென்றும் அலாவுடீனுக்கோர் கடிதம் வரைந்தனுப்பினாள். இந்த யோசனையைக் கேட்ட அலாவுடீன் மிகக் களிப்படைந்து ராணியின் வேலைக்காரிகளிலொருவரையுந் தொடக்கூடாதென்று தன் மனிதர்கட்குக் கட்டளையிட்டது மன்றி அவள் வரவைத் தான் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாயும் அவளுக்குத் தெரிவித்தான்.

பத்மாவதி தன் நம்பிக்கையுள்ள யுத்த வீரர்களை யழைத்துத் தேச நிலைமையை அவர்களுக்குத் தெளிவா யெடுத்துரைத்து, ஒவ்வொரு பல்லக்கிலும் முழு ஆயுதபாணியான ஒரு போர்வீரன் உட்காரப்பெற்ற ஆயிரம் பல்லக்குகளைத் தயார்செய்ய உத்தரவு கொடுத்தாள்.

இத்தகைய ஊர்கோலம் அலாவுடீன் தங்கியிருந்த கூடாரங்களை நோக்கிச் செல்ல, அதை யொருவனுந் தடைசெய்யவில்லை. பீமஸிம்மன் வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலையை யடைந்தவுடனே ராணி தன் பல்லக்கை விட்டறங்கித் தன் பதியினிடஞ் சென்றனள். அங்கே தன்னைப் பார்த்ததால் மிகுதியுஞ் சந்தோஷமடைந்த ராணாவிடந் தன் சூழ்ச்சியைச் சில வார்த்தைகளில் சொன்னாள். உடனே மறைந்திருந்த போர்வீரர்களெல்லாந் தங்கள் பல்லக்குகளினின்றும் வெளிப்பட்டு அங்கிருந்த காப்பாளிகளையும் மற்றோரையுங் கொன்று நாசப்படுத்தி ராணாவையும் ராணியையும் விடுவித்துத் துரிதமான புரவிகளின்மே லேற்றிக் கோட்டையை நோக்கி விரைந்தனர்.

இது இப்படியாக, அலாவுடீன் ராணி வருகிற நேரத்தை ஆவலுடனும் ஆத்திரத்துடனும் எதிர்பார்த்திருந்தானாதலின், குறிப்பிட்ட காலமாகிவிட்டதென்று நினைத்துச் சிறைச்சாலைக்குத் தானே சென்றான். அங்கிருந்த அலங்கோலத்தைப் பார்த்தபோது அவனுக்குண்டான ஆச்சரியத்திற் களவில்லை. ஒரு ஜீவனாவது உயிருடன் காணப்படவில்லை. அவன் ஒரு ஸ்திரீயினால் வஞ்சிக்கப்பட்டான். உடனே இதற்குப் பிரதி செய்யத் தீர்மானித்துக்கொண்டு அலாவுடீன் தன் படைகளையெல்லாம் ஒன்று சேர்த்துச் சித்தூர்க் கோட்டையை மறுபடியுந் தாக்கினான்.

எராளமான மகமதியப் பட்டாளங்களை இந்தவிசை எதிர்க்கமுடியாதென்று ரஜபுத்திரர்களுக்குத் தெரிந்தது. ஒவ்வொன்றையு மிழந்துவிடுவார்களென்று அவர்களுக்குத் தெளிவாய்ப் புலப்பட்டது. என்றாலுந் தினம் அதிகரித்த தொகையோடு அவர்கள் அதிவீரமா யநேக நாட்கள் கடும் போர்புரிந்தனர். கடைசியாகத் தங்களா லினிமேல் முடியா

சென்று கண்டவுடன் தங்கள் மனைவிகளிடஞ்சென்று அவர்கள் மானத்தை யிழப்பதின் உயிரை விடுவதே மேலென்று விவரித்துச் சொன்னார்கள். அவர்களெல்லோருஞ் சந்தோஷமா யொப்புக்கொள்ள, அழகிய ஸ்திரீ ரத்னமாகிய அழியாப் புகழ்பெற்ற பத்மாவதி அவர்களுக்குத் தலைமையாக நின்றாள். அவள் ராஜ புதனத்திலுள்ளவர்களை யெல்லாங் கூப்பிட்டுச் சொன்னதாவது:— "சகோதரிகளே! நமது கணவர்களையும், தந்தை தனயர்களையும், சகோதரர்களையும் இழக்குங் காலஞ் சமீபித்திருக்கிறது. இனிமேல் நாம் பூமியின்மேல் க்ஷேமத்துடனும் மானத்துடனும் வசிப்பது முடியாத காரியம். நமது கொடிய துன்மார்க்க விரோதிகள் கையி லகப்பட்டு அவமானமடைவதைக் காட்டிலும் இந்தத் துஷ்ட பாப வுலகத்தைவிட் டகலுவதே மேலானது. ஹிந்து ஸ்திரீகளாகிய நாம் நம் மானத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்ளக்கூடுமென்பதை இந்த ஜனங்களுக்குக் காட்டுவதுடன், வருங்காலத்துக்கும் கௌரவமான பெயரை நிறுத்திப் பாரத நாட்டிற்கும் பெரும் புகழை வைப்போம்."

ஓர் பெரிய அக்னி காஷ்டம் நிர்மித்து மகா பதிவிரதா சிரோமணியாகிய அதிரூபலாவண்ய பத்மாவதி சிறிதுங் கலக்கமின்றி அதில் முதலில்தானே இறங்கவும் மற்ற ஸ்திரீகளும் ஒருவருக்குப் பின் ஒருவராய் அப் பயங்கரமான அக்னி தடாகத்தில் அவளைப் பின்தொடர்ந்து சென்றார்கள். இது சித்தூரில் பயங்கரமான "ஜோஹர்" என்று பிரவித்திபெற்றது. இதைப்பற்றி யநேக பாட்டுக்கள் இராஜ புதனத்திலும் மாளவத்திலும் இன்றைக்கும் பாடப்படுகின்றன. இந்த ஸ்திரீகளின் ஆடைகளையெல்லாம் ரஜபுத்திரர்கள் சிரசின்மேல் தரித்துத் தங்கள் உயிர்க்குக் கொஞ்சமு மஞ்சாமல் துணிகரமாய்ப் போர்க்களத்திற்குச் சென்றனர். அங்கே அவர்கள் அதி பராக்கிரமமாய்ப் போர்புரிந்து மாண்டனர். பிறகு அலாவுடீன் புண்ணியவதியாகிய ராணியைத் தேடிக் கோட்டைக்குச் சென்றான். ஆனால் அவனுடைய பாவமான கைகள் அவளைத் தொடுமுன் அவள் சென்றுவிட்டனளே! ஆனால் அக்காலத்தின் மகா அழகுங் கீர்த்தியும் பெற்ற ராணியாகிய பத்மாவதிக்குப் பதிலாக அவ்விடத்தில் சாம்பலைத் தவிர வேறொன்றையும் அவன் காணவில்லை.

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்
கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்
முத்தியாலுப்பேட்டை.

பொறுமை.

பொறுமையாவது காரணம்பற்றியேனும் அறியாமையினுலேனும் ஒருவன் தனக்குப் பிழைசெய்தவிடத்து, தான் அப்பிழையை அவனிடத்துச் செய்யாது பொறுத்துக்கொண்டிருக்குந் தன்மை.

இச்சிறந்த குணம் ஒருவனிடத்து இல்லாமற்போயாலுல் மற்றைய குணங்கள் இருந்தும் பயனில.

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(திருக்குறள்.)

தன்னைத் தோண்டுகின்றவர்கள் வீழாமல் தாங்குகின்ற நிலம்போலத் தம்மை அவமதிப்பவர்களைப் பொறுத்துக்கொள்ளுதலே தலைமையான அறமாகும்.

ஒரு சிறிய ஈயும் தமது தலைமேல் ஏறி உட்காருவதைப் பார்ப்பவர்கள், பிறர் அவமதிப்பை ஏன் பொருளாகக் கொள்ளவேண்டும்! பொறுமை வகிக்காதவர்கள் அடையுங் கேடு பலவற்றை நாம் கண்கூடாகக் காணுகின்றோமே. இதற்குச் சாத்திரப் பிரமாணம் வேண்டுவதில்லையே.

ஒருவன் ஒரு தீங்கு செய்தவிடத்து நமக்குக் கோபம் பொங்குவது உண்மையே. ஆயினும் அதைப் பொறுமையினுல் அடக்கிக்கொள்வதே விவேகமாகும். இதுபற்றியே "உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குசினங் காத்துக்கொள்ளுங் குணமே குணமென்க" என்றுர் பெரியோர்.

யோசிப்போம்: நம்மை ஒருவன் இகழ்வானுயின், இவன் எதற்காக நம்மை இகழ்ந்தான் என்று பரியாலோசனை செய்யவேண்டும். அவன் அங்ஙனம் இகழ்தற்குரிய காரணம் நம்மிடத்துச் சிறிதேனும் இருக்குமாயின் அதை நீக்கிக்கொள்ளல் வேண்டும். காரணமின்றி ஒருவன் இகழ்வானுயின் அதற்குங் கோபங்கொள்ளுதல் கூடாது. ஏனெனின், கரும்பைப் பார்த்து அது வேம்பு என்று ஒருவன் சொன்னுல் அக் கரும்பிற்கு என்ன குறைவு? ஆதலின் காரணமின்றி யுண்டாகின்ற ஒருவனது நிந்தை பொய்யெனத் தள்ளல்வேண்டும்.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்"

என்ற தெய்வப்புலவர் திருவாக்கின்படி, மனச்செருக்கால் நம்மிடத்துத் தீயவற்றைச் செய்தவனை நாம் நமது பொறுமையால் வென்றுவிடல் வேண்டும்.

இங்ஙனமன்றி ஒருவன் நமக்குத் தீங்கு செய்தானென்று கருதி அதற்குப் பிரதியாக நாமும் அவனுக்கோர் தீங்கு செய்யப்புகின், நமக்கும் அவனுக்கும் வேற்றுமை யில்லாமற்போகின்றது. அப்போது நாம் நல்லோம் அவன் தீயன் என்பதற்குச் சான்றென்னை? கண்ணில்லாதவன் விடத்தை யுண்ணின் கண்ணுண்டயவரும் உண்பாரோ! அவிவேகம் காரணமாக ஒருவன் செய்யும் மிகையைப் பொறுத்துக்கொள்ளுதலே விவேகத்திற் கழகாகும். ஆதலின் தன்னைக் கல்லின்மோதி உடைப்போர்க்கு உணவாகின்ற தேங்காய்போல, நமக்கு இன்ன விழைத்தார்க்கும் பொறுத்துக்கொண்டு நாம் நன்மையே செய்தல்வேண்டும். "இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்காலென்ன பயத்ததோ சால்பு" என்ற பொய்யா மொழியே இதற்குப் போதிய சான்று.

மேலும் "பொறுத்தவர் பூமியாள்வார் பொங்கினவர் காடாள்வார்" என்ற பழமொழிக்கேற்ப, பாண்டவர்களுள் ஒருவரான தருமபுத்திரரது தகுதியைப் பாருங்கள். துரியோதனாதியர் செய்த தீமைகளையெல்லாம் பொறுத்ததுமன்றித் தனது அன்புள்ள மனைவியைத் துச்சாசனன் சபையிலிழுத்துத் துகிலுரிந்து மானபங்கம் செய்யத் துணிந்தகாலத்தும் பொறுத்துக்கொண்டிருந்த தருமரது பொறுமையை நாமென்னென்று புகழ்வது! வல்லமை யின்மையாற் பொறுத்திருந்தனர் என்று சொல்ல எவர்க்கேனும் நாவெழுமா! பீமார்ச்சுனர்களுடைய பராக்கிரமம் யாருக்குத் தெரியாது! பொறுமையாலுளதாகும் நன்மையை நன்கு தெரிந்தவராதலின் பொறுத்திருந்தாரென்க. அங்ஙனம் பொறுத்திருந்ததினாற்றான் பொங்கின பகைவர்களெல்லாம் இடுகாடாள, உலகத்தையெல்லாம் ஒரு குடைக்கீ ழாளும்படியான பெரும் பாக்கியத்தைப் பெற்றார் தருமர்.

பொறுமையுள்ள மனதில் சுகம் தோன்றுவதும் கோபமுள்ள மனதில் துக்கந் தோன்றுவதும் பிரத்தியட்ச பலனாதலின், நமது மனத்தைக் குளிரச்செய்து சுகத்தையடைவதற்கு, நமது உள்ளத்தைக் கவர்ந்து கொண்டு பொங்கி யெழுகின்ற கோபத் தீயைப் பொறுமையென்னும் நீரினால் தணித்துவிடல் வேண்டும்.

முத்து மாணிக்க செட்டியார்

உபாத்தியாயர்

ஆற்காடு.

தமிழில் ஓர் புதிய அகராதி.

1. தமிழ்ப்பாஷையின் பரிபாலன விஷயத்தில் ஓர் சாதனமாயிருந்து தமிழ் கற்பவர்களுக்கு உதவும்படியாகப் புதிய ஒரு தமி ழகராதியைத் தயாளகுணமுள்ள கனம்பொருந்திய சென்னை கவர்ன்மெண்டார் பெருந் தொகையளித்துத் தக்கவர்களைக்கொண்டு எழுதுவித்து வெளிப்படுத்த உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்கள். இது தமிழ் நாட்டாருக்கும் தமிழ் கற்பவர்களுக்கும் தமிழ் கற்பிக்கிறவர்களுக்கும் துவிபாஷிகளுக்கும் தமிழ் கற்கும் புறநாட்டவர்களுக்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கும் ஓர் சிந்தாமணிபோல் பெரும் பயனளிக்குமென்பதில் சந்தேகமில்லை.

2. இதற்காக ஒரு சங்கம் எற்படுத்தப்பட்டு அச்சங்கத்தார்கள் சென்னையிற் கூட்டங்கூடி வேலைசெய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். இம்முக்கியமும் பெரியதுமாகிய வேலை இவ்விதஞ் செய்யப்படுமென்று எல்லோரும் ஒருமித்துத் தீர்மானஞ்செய்திருக்கும் விவரம் சென்னைச் சுதேசமித்திரன் பத்திரிகையிலும் மெயில் பத்திரிகையிலும் வெளிப்படுத்தப்பட்டுளது.

3. தமிழில் நடைபெறுந் தினமானப் பத்திரிகைகளிலும் வாராந்தரப் பத்திரிகைகளிலும் மாத ஸஞ்சிகைகளிலும் தமிழில் கண்ணோக்கம் வைத்துத் தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழுக்கு உழைத்துக் கொண்டிருப்பவர்களும் தமிழிற் புத்தகங்க ளெழுதிக்கொண்டிருப்பவர்களும் தமிழ்ப் போதகர்களாய்த் தக்கதோர் அகராதி இல்லாது வருந்துபவர்களும் தங்கள் வாழ்நாளைத தமிழுக்கே தத்தம் செய்துகொண்டிருப்பவர்களுமான பலரும் இவ் வகராதி விஷயமாய் எழுதி வெளிப்படுத்தும் விஷயங்கள் இவ் வகராதிச் சங்கத்தாருக்குப் பேருதவியா யிருக்குமாதலால் முதல் முதலில் இச் சங்கத்தார் இவ் வகராதி வேலை பூர்த்தியாகும் வரையில் எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளையும் வரவழைத்துப் பார்த்து அதிலடங்கிய முக்கிய விஷயங்களைப் பற்றித் தீர்க்காலோசனைசெய்து நேராக முடிவுசெய்யவேண்டும்.

4. இவ் வகராதிச் சங்கத்தார்களின் பெயர்களும் விலாசமும் இவர்களின் கைக்கீழ் வேலைசெய்யுமவர்கள் விலாசமும் அவர்கள் செய்யும் வேலையின் விதமும் இவர்களுக்கு மாதச் சம்பளமுளதானல் அதன்

83 79

விவரமும் சம்பளமில்லாது தமிழுக்காகவே உழைப்பவரிருந்தா லவர்கள் விலாசமும் சென்னைச் சுதேசமித்திரனில் பிரசுரமாதல் வேண்டும். இவர்களை யறிந்துள்ளோர் உள்ளூரிலும் வெளி நாடுகளிலும் யாழ்ப்பாணத்திலும் இருப்பவர்களிற் சிலர் தமிழுக் குழைப்பவர்களா யிருப்பார்களாதலால் அவர்களால் வெளியாகும் சமாசாரங்களும் நூற்பெயர்களும் அகராதிச் சங்கத்தா ரவர்களுக்கு மிக உபயோகமாய்ச் சமய சஞ்சீவிகள் போல் பயனளிப்பவைகளாம்.

5. அகராதி வேலையைத் தொடக்கஞ்செய்ய இதுவரையில் சேகரிக்கப்பட்டுள்ள ஸாதனங்க ளிவையென்று பிரசுரமாகவேண்டும். இப்படிச் செய்வதால் விடுபட்டுள்ள சாதனங்களைச் சேர்த்துக்கொள்ள இடமுண்டாகும். அகராதி வேலை திருத்தமாயுஞ் சுருக்கமாயுஞ் சீராயும் நடைபெறுமானால் இப்பொழுது இங்கிலீஷ் பாஷையில் வழங்கிவரும் பெரிய " வெப்ஸ்டர் அகராதி " போலவோ அல்லது அதனிலும் சற்றுப் பெரியதாகவோ ஒரு அகராதி வெளியாகும். பலர்கூடி மனப்பூர்வமாய் உழைத்தாலன்றி இப்பெரியகாரியம் சீக்கிரம் முடியாது. "வின்ஸ்லோ" "ராட்லர்" இவர்கள் எழுதியிருக்கும் மாதிரியாகவே இவ் வகராதி ஏற்படுவது நலமாம்.

6. மனப்பூர்வமாய் உழைக்க முன்வருபவர்களிடம் தபாற் செலவிற்காகத் தபால் முத்திரைத் தலைகள் (ஸ்டாம்புகள்) மூன்று ரூபாய்க்கும் சாதல்வார் (Contingent) செலவிற்காக ஒருரூபாய்க்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இது ஒரு மாதத்திற்காம். வேலைசெய்பவர்கள் கணக்கு வைத்துக்கொண்டு பிரதி மாஸமும் கேட்டு வாங்கிக்கொள்ளவேண்டும். சாதனமின்றி ஒன்றையும் சாதிக்க முடியாது. அச்சாதனமும் நற்சாதனமாயிருக்கில் சாத்தியமும் நல்லதாகவே யமையும்.

7. இம் முக்கிய காரியத்தில் முன்வந் துழைக்கத்தக்கவர்களை நமது அறிவிற் கெட்டியவரையில் நாம் பிந்தி வெளியிடுவோம்.

தி. வெங்கடராம ஐயங்கார்

தமிழ்ப் பண்டிதர்

பென்ஷன்தார்

இலக்கியப் பகுதி.

மணிமேகலை.

பதினாறுவது
ஆதிரை பிச்சையிட்ட காதை.

[பதினாறுவது மணிமேகலைக்கு ஆதிரையென்னும் பத்தினிப் பெண்டிர் பாத்தூணீத்த பாட்டு.]

1 – 16 ஈங்கிவள் செய்தி கேளென விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை யுரைப்போ
ளாதிரை கணவ னாயிழை கேளாய்
சாதுவ னென்போன் றகவில னாகி
யணியிழை தன்னை யகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூ ணல்க
வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்
வங்கம் போகும் வணிகர் தம்முடன்
றங்கா வேட்கையிற் றானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ
வொடிமரம் பற்றி யூர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்

இ – ள். ஆதிரை யென்னும் இவள் கற்பின் விசேடத்தைக் கேளென்று விச்சாதர மடந்தையாகிய காயசண்டிகையென்பாள், அவ்வாதிரைக்கு நேர்ந்ததை மணிமேகலைக்கு உரைப்பாள் : மணிமேகலை! கேட்பாயாக; ஆதிரை கணவன் சாதுவனென்போன் தீயொழுக்கமுடையவனாய் ஆதிரையைப் பிரிந்து சென்று ஒரு வேசையின் இணக்கத்தால் அவள் தீய வொழுக்கத்தால் வந்த உணவைக் கொடுக்க உண்டு, வட்டாடலிலும் சூதாடலிலும் பெரிய பொருளைக் கொடுத்து, கெடுதலுற்ற அப்பொருளின் பகுதிகள் அழிதலும், அவனால் முன் ஆதரிக்கப்பட்ட அவ்வேசையும் பிறர் நலத்தைக் காட்டிப் பொன்னில்லாதவனென்று அவனை

அகற்றிவிட்டனள். அங்ஙனம் அகற்றுதலும், சாதுவன்றானும் கப்பலேறிச் செல்லும் வர்த்தகருடன் கூடிப் பலவிடத்துஞ் செல்லவேண்டுமென்னும் விருப்பத்தால் செல்லும்போது, குளிர்ந்த பெரிய கடலில் காற்றால் கப்பல் கவிழ, சாதுவன் பாய்மரத்தின் ஒடிந்த துண்டமொன்றைப் பற்றி, தவழ்கின்ற அலைகள் செலுத்துதலால், ஆடையின்றித் திரிகின்ற சாரணராகிய நாகர் வாழும் மலைப்பக்கத்தை யடைந்து அவர்கள் பாற்பட்டவனாயினனென்க.

கைத்தூண் – (தீய) ஒழுக்கத்தால் வந்த உணவு; கை – ஒழுக்கம் – வட்டு – உண்டையுருட்டுதல். கணிகைக்கும் வட்டிற்கும் சூதிற்கும் கொடுக்கப்படுதல்பற்றி 'கெட்டபொருள்' என்றார். காணம்–பொன். பேணிய – விரும்பிய எனவுமாம். கையுதிர்க்கோடல் – சீலமில்லாதவரைக் காணின் அவரோடு பேசாமல் அவரைப் போகும்படி கையசைத்துக் குறிப்பித்தல் சைன முனிவர்க்கு இயல்பு. நக்கம் (நக்நம்) – நிருவாணம். பான்மை – பகுதித்தன்மை.

17 – 34. நாவாய் கேடுற நன்மரம் பற்றிப்
போயினன் றன்னோ டுயிருயப் போந்தோ
ரிடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கட
லுடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்
சாதுவன் றானுஞ் சாவுற் றனனென
வாதிரை நல்லா ளாங்கது தான்கேட்
டூரீ ரேயோ வொள்ளழ லீமந்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே னென்றவள் புகுதலும்
படுத்துடன் வைத்த பாயற் பள்ளியு
முடுத்த கூறையு மொள்ளெரி யுறாஅ
தாடிய சாந்தமு மசைந்த கூந்தலிற்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்ப

இ – ள். மரக்கலம் உடைய ஒடிந்த மரத்துண்டைப்பற்றிப் போயின சாதுவனோடு உயிர்பிழைக்கச் சென்றவர்கள், இருளையுடைய இடை

யாமத்தில், அலை வீசுகின்ற பெருங்கடலில் உடைந்த கப்பலிலகப்பட்டு இறந்தவர்களோடு சாதுவனும் இறந்தானென்று சொல்ல, அதுகேட்டு ஆதிரையானவள் புலம்பி, ஊரிலுள்ளவர்களே! ஒள்ளிய நெருப்புண்டாக்க விறகடுக்குத் தாருங்கள் என்றுசொல்லி, மயானத்தின்கண் தோண்டப்பட்ட குழியமைத்து முறுக்குண்டவிறகினால் தீமூட்டி, சிறந்த என் கணவன் வினைப்பயன் செலுத்தப் புக்கவிடத்து யானும்புகுவேனென்று, ஆதிரை அத்தீயிற் பாய்ந்தனள்; பாய்தலும் படுத்து உடன்வைத்த படுக்கையிடமும் உடுத்திய புடைவையும் நெருப்புப் பற்றாமலும், பூசிய சந்தனமும் அசைகின்ற கூந்தலிற் சூடிய மலர்மாலையும் பழைய நிறம் வழுவாமலும், வாசனை பொருந்திய தாமரை மலரில் ஒப்பற்றிருந்த திருமகள்போன்று இனிமையாக இருந்தனளென்க.

பத்திராதிபர்.

மயிலச் சிலேடை வெண்பா

மூலமும் உரையும்.

உ. பன்னரிய பாவலரும் பாசொளிய மூங்கிலும்வான்
மன்னவரை யேயு மயிலமே — துன்னு
மடங்கலைவே யாமுத்தன் மைந்தன் பிறப்பா
மடங்கலைவே யாமுத்தன் வைப்பு.

(இ - ள்.) பன் - சொல்லுவதற்கு, அரிய - அருமையாகிய, பாவலரும் - பாவில் வல்லவர்களும், வான் - மேலாகிய, மன்னவரை - அரசர்களை, ஏயும் - ஒத்திருக்குஞ் சிறப்பினையும், பாசு - பசுமையாகிய, ஒளிய - பிரகாசத்தையுடைய, மூங்கிலும் - மூங்கில்களும், வான் - தேவலோகத்தை, மன்ன - சேர, வரை - கணுக்களோடு, ஏயும் - பொருந்துஞ் சிறப்பினையுமுடைய, மயிலமே - மயில மலையே, துன்னும் - (அன்பர்கட்குக்) கிட்டிய, மடம் - அறியாமையை, கலை - கெடுக்கும், வேய் - மூங்கிலின் அடியில், ஆம் - தோன்றிய, முத்தன் - சிவபெருமானுடைய, மைந்தன் - புத்திரரும், பிறப்பு ஆம் - பிறவியாகிய, மடங்கு - வியாதியினால், அலைவு-வருந்துதலை, ஏயா - பொருந்தாத, முத்தன் -பரிசுத்தத்தையுடையவரு மாகிய முருகக்கடவுளுக்கு, வைப்பு - இருக்குமிடமாம், எ - று.

"வந்தவப்பர் தாமு மகிழ்பூத் தழைக்கப்பாடும்" என்னும் புலியூர் வெண்பாவில், நன்னூல் பொதுவியல் "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினு மிழிப்பினும் பாறிணை யிழிக்கினு மியல்பே" என்னும் இருபத்தெட்டாஞ் சூத்திரத்தில், உயர்வினும் என்ற விதிப்படி, உயர்வினொருமைப்பால் பலர்பாலாய் வந்த அப்பர் என்னும் பலர்பாற் படர்க்கைச்சொல் பாடும் என்னும் பெயரெச்சங் கொண்டதுபோல, பாவலரென்னும் பலர்பாற்படர்க்கைமொழி, வயுமென்னும் பெயரெச்சங்கொண்டது. வயா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

கான்மலியு முச்சியினுங் காவியஞ்செய் வோர்களினும்
வான்மதியங் கூரு மயிலமே - மீன்வீயாம்
ஆற்றுப் படையா னகமயங்கு கீரன்சொல்
ஆற்றுப் படையா னகம்.

(இ - ள்.) கான் - மணம், மலியும் - மிகுந்திருக்கும், உச்சியினும் - மலையின் உச்சியிலும், வால் - வெண்மையாகிய, மதி - சந்திரன், அங்கு - அந்த விடத்தில், ஊரும் - தவழுஞ் சிறப்பினையும், காவியம் - காப்பியங்களை, செய்வோர்களினும் - செய்யும் புலவர்க ளிடத்திலும், வான் - மேலாகிய, மதி - அறிவு, அம் - அழகாக, கூரும் - மிகுந்திருக்குஞ்சிறப்பினையுமுடைய, மயிலமே-மயிலமலையே, மீன்-மீனும், வீ - பக்ஷியும், ஆம் - ஆகும், துப்பு - மகத்துவத்தை யுடைய, ஆல் - ஆலமரத்திலிருக்கும், அடையான் - இலையால், அகம் - மனம், மயங்கு - மயங்கிய, கீரன் - மதுரைக் கணக்காயனர் மகனார் நக்கீரனார், சொல் - திருவாய் மலர்ந்தருளிய, ஆற்றுப்படையான் - திருமுருகாற்றுப்படையை யுடையவராகிய முருகக்கடவுளுக்கு, அகம் - இடமாகும் எ - று.

சந்திரனெனப் பொருள்படும் மதி, மதுவை யுடைய தென்பது பொருளாதலால், பொருளடியாகப் பிறந்த பெயரென்க; மது (அமுதம்) பகுதி, இ - ஒன்றன்படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி. ஆற்றுப்படையான் என்பதை, துப்பு ஆல் அடையான் என்று சொல்லை மாற்றிப் பொருள் கூறப்பட்டது. மயங்கு கீரன் வினைத்தொகை ஆதலால், நன் - உயிர் "மூன்று மாறு பெண் வினைத்தொகை சுட்டீறுகுமுகர முன்னரியல்பாம்" என்ற 29-ம் சூத்திரத்தில், வினைத்தொகை யீறுகுமுகர முன்னரியல்பாம், என்ற விதிப்படி இயல்பாயிற்று. பாதி நீரிலும் பாதி நீர்ப்புறத்திலுமாக வீழ்ந்து, நீரில் வீழ்ந்த பாதி மீனாகியும் கரையில் வீழ்ந்த பாதி பக்ஷியாகியும் நீரிலும் கரையிலும் தம்மிலீர்த்துக் கொண்டிருந்த ஆலிலையால், அகமயங்கு கீரன் என்பதற்குப் பிரமாணம் சீகாளத்தி புரா

ணம் நக்கீரச் சருக்கம் "அனையவாற்கீழருந் தமிணாவலன், மன னமர்ந்து வதிந்தனனாங்கொரு, சினையினீங்கிலைபாதி திரைப்புன, லனைய வீழ்ந்தது நற்புனற்றீரமே" எனவும், "வீழ்ந்தது பறவையு மீனுமாகியங், காழ்ந்திடு புனலினு மகன் கரைக்கணுஞ், சூழ்ந்திடு முலகினுந் துறவின் பாலினுந் தாழ்ந்திடு மனமெனத் தம்மிலீர்த்தவே" எனவும், "அனையதோர் புதுமை கண்டதிசயத்தனாய்த், தனியொருதானவண் டரித்துவைகினா, னினைவரு குறுமுனியிலக்கணம் பெறப், புனைதரு மிலக்கியப் புலவர் சிங்கமே" எனவும் வரும் 99, 100, 101-வது செய்யுள்களாலும்; அந்த நக்கீர தேவராற் சொல்லப்பட்டது, திருமுருகாற்றுப்படை யென்பதற்குப் பிரமாணம் ஷை புராணம் ஷை சருக்கம் "இன்னன நினைந்து கீரனிலங்கிலை நெடுவேற்செம்மல், பன்னிருசெவியுமாரப் பருகமுதாகியோதி, லுன்னிய வுன்னியாங்கிங் குதவுவதாகிப்பாவுண், முன்னுறவந்து நிற்கு முருகாற்றுப் படை மொழிந்தான்." எனவரும் 115-வது செய்யுளாலும் உணரப் படும். (3)

பு. அ. பெரியசாமிப் பிள்ளை.

இலக்கணப் பகுதி.

தொல்காப்பியம்.

நச்சினார்க்கினியம்.

பொருளதிகாரம்.

முதலாவது

அகத்திணையியல்.

க. கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த வெழுதிணை யென்ப.

பொருளினது இலக்கண முணர்த்தினமையின் இது பொருளதிகாரமென்னும் பெயர்த்தாயிற்று. பொருளாவன அறம் பொரு ளின்பமும், அவற்றது நிலையின்மையும், அவற்றினீங்கிய வீடுபேறுமாம். பொரு

ளெனப் பொதுப்படக்கூறவே, இவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப்பொருளும் கருத்துப்பொருளும், அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும், அவற்றின் பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும், பிறவும் பொருளாம். அகத்திணைக்கண் இன்பமும், புறத்திணைக்கண் ஒழிந்த மூன்று பொருளும் உணர்த்துப.

இப்பொருளை எட்டு வகையால் ஆராய்ந்தாரென்ப; அவை அகத்திணை புறத்திணையென இரண்டுதிணை வகுத்து, அதன்கட் கைக்கிளை முதற் பெருந்திணை யிறுவாயேழும் வெட்சி முதற் பாடாண்டிணை யிறுவாயேழுமாகப் பதினான்குபால் வகுத்து, ஆசிரியம் வஞ்சி வெண்பா கலி பரிபாடல் மருட்பா என அறுவகைச்செய்யுள் வகுத்து, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென நால்வகை நிலனியற்றி, சிறுபொழுதாறும் பெரும்பொழுதாறுமாகப் பன்னிரண்டு காலம் வகுத்து, அகத்திணை வழுவேழும் புறத்திணை வழுவேழுமெனப் பதினான்கு வழுவமைத்து, நாடக வழக்கும் உலகியல் வழக்குமென இருவகை வழக்கு வகுத்து, வழக்கிடமும் செய்யுளிடமுமென இரண்டிடத்தான் ஆராய்ந்தாராகலின்.

இனி இவ்வோத்து அகத்திணைக்கெல்லாம் பொது இலக்கண முணர்த்துதலின் அகத்திணையென்னும் பெயர்த்தாயிற்று. என்னை? எழுவகை யகத்திணையுள் உரிமை வகையால் நிலம் பெறுவன இவை யெனவும் அந்நிலத்திடைப் பொது வகையால் நிகழ்வன கைக்கிளை பெருந்திணை பாலையெனவுங் கூறலானும், அவற்றுட் பாலைத்திணை சில் வகையால் நடுவணதெனப்பட்டு நால்வகை யொழுக்கம் நிகழாநின்றுழி அந்நான்க னுள்ளும் பிரிதற்பொருட்டாய்த் தான் பொதுவாய் நிற்கு மெனக் கூறலானும், முதல் கரு வுரிப்பொருளும் உவமங்களும் மரபும் பொதுவகையாற் கூறப்படுதலானும், பிறவும் இன்னோரன்ன பொதுப் பொருண்மைகள் கூறலானுமென்பது. இங்ஙனம் ஒதிய அகத்திணைக்குச் சிறப்பிலக்கணம் ஏனை ஒத்துக்களாற் கூறுப. ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்றகாலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாகலின் அதனை அகமென்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகமென்பது ஓர் ஆகுபெயராம். இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்குந் துய்த்துணரப்படுதலானும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறமெனவேபடும். இன்பமேயன்றித் துன்ப

மும் அகத்தே நிகழுமாலெனின், அதுவுங் காமங் கண்ணிற்றேல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்த துன்பம் புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படாமையின் புறத்திணைப்பாலவாம். திணையாவது ஒழுக்கம்; இயல் இலக்கணம்; எனவே அகத்திணை யியலென்றது இன்பமாகிய ஒழுக்கத்தினது இலக்கணமென்றவாறாயிற்று.

இதன்பொருள். கைக்கிளைமுதலா — கைக்கிளை யெனப்பட்ட ஒழுக்கம் முதலாக; பெருந்திணையிறுவாய் — பெருந்திணை யென்னும் ஒழுக்கத்தினையிறுதியாகவுடைய எழனையும்; முற்படக்கிளந்த எழுதிணை என்ப — முற்படக் கூறப்பட்ட அகத்திணை எழென்று கூறுவர் ஆசிரியர் என்றவாறு.

எனவே பிற்படக்கூறப்பட்ட புறத்திணையும் எழுளவென்றவாறாயிற்று. எனவே அப்பதினான்கு மல்லது வேறு பொருளின்றெனவரையறுத்தவாறாயிற்று. அகப்புறமும் அவைதம்முட்பகுதியாயிற்று. முதலும் ஈறுங் கூறித் திணையேழெனவே, "நடுவணைந்திணை" உளவாதல் பெறுதும்; அவை மேற்கூறுப.

கைக்கிளை யென்பது ஒருமருங்குபற்றிய கேண்மை. இது எழாவதன் தொகை. எனவே ஒருதலைக்காம மாயிற்று. எல்லாவற்றினும் பெரிதாகிய திணையாதலின் பெருந்திணையாயிற்று. என்னை? எண்வகை மணத்தினுள்ளும் கைக்கிளைமுதல் ஆறு திணையும் நான்கு மணம் பெறத் தானொன்று நான்கு மணம் பெற்று நடத்தலின். முற்படக்கிளந்தவென எடுத்த வோசையாற் கூறவே பிற்படக் கிளந்த எழுதிணையுளவாயிற்று. அவை வெட்சி வஞ்சி உழிஞை தும்பை வாகை காஞ்சி பாடாண்டிணை எனவரும்.

எண்வகை மணனும் எதிர்சென்று கூறுவதாகலானும், காமஞ் சாலா இளமைப்பருவம் அதன் கண்ணதாகலானும், கைக்கிளையை முற்கூறினர். என்பவென்றது அகத்தியனாரை. இக்குறியீடுகளும் அகத்தியனா ரிட்டவென்றுணர்க.

பத்திராதிபர்.

சாத்திரப் பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி)

பயன் யாதொன்றுமின்றி யிடர்த்தொடர்பிற் கேதுவாய உற்பத்தி, சரை, மரணம், ஆபத்து, சம்பத்து முதலியன மாறிமாறித் தோற்றி மறைந்து வளர்ந்துகொண்டே யிருக்கின்றன. சம்பத்தை யிடர்த்தொடர்பிற் கடியென வியம்பலேலுமாலோ, சம்பத்துப் போகவேதுவாதலிற் றேகத்திற்குப் பயன்படுதலின்; எனச் சங்கித்த லிங்கிதமன்றாம். என்னை? மீண்டும் மீண்டும் அயில்கின்ற துச்சமான எச்சிற் போகங்களாற் கிரியின் சிரத்திலுறையுந் தருக்கள் வாயுவா லோயா தலைதல்போ லெஞ்ஞான்று மலைக்கப்படுகின்றாமன்றா.

அறிஞராயினார் அரந்தை யழியு முபாயம் நேடாரே லவர்பெற்ற வறிவென்னும், வாளாவேகியதன்றோ, அவர்கள் சடங்கள்போலன்றி வேறென்னைதானாவர். அந்தோ பரிதாபம்! துவிரேபத்தாற் றுளைக்கப்பெற்ற துளையுள வறிவறு மூங்கில்கள் ஒலிப்பனபோ லுலகர் பிராணனெனப் பெயரிய சமீரணனா லொலித்தலைபவராய்ப் புருஷார்த்தோபயோகத் தண்மியாது வாளா வழிகின்றனர்.

அம்ம! நம்மனோர்க்குத் தருக்கோடரம்பற்றிச் சுற்றியெரியு நீடைப் போன்ற விவ்வனா றென்றுபோமென்று சந்ததஞ் சிந்தை முந்தவில்லையே.

கல்லிடை யிடையீடில்லாததேய்ப்பக் குடும்பத் துன்பங்களா னிரப்பப்பெற்றுக் கல்லிடை கற்போலுருண்டு மருண்டு வாடினும் துன்பந் தோற்றவில்லையே.

வஞ்சனையையே செய்யுஞ் சஞ்சலமுற்ற சம்பத்தானது புந்திகந்த நிந்தித மோகத்தையும் அளவிறந்த அரந்தையையும் ஈவதேயன்றிச் சற்குணர் போற்றும் நற்குணங்களையும் நூக்குகின்றதன்றா. கோரப்பகை, இலம்பாடு, நோய் முதலிய தீரா ஆபத்துடையார்க்குப் பல்மகப்பேறுடை வீடும் மகிழ்வைப் பயவாததேபோற் பொருள்படைத்தாரைப் பல்வகைச் சிந்தை வடிவ துனிகளா லெள்ளெள்ளாய்ப் பிளக்கும் நேமியாய பொருள் யாவர்க்குத்தா னிடரைப் பயவா தின்பம் பயக்கும்.

விலங்கொ டிலங்கும் மதக்கரி மனம்போ லுடன்முதலெல்லவையு மழிவுறுமாலென்னும் உள்ளத்தா னம் முள்ளமானது பதைப்புற்றுப் பேரின்பைக் காதலியாது விட்டுவிட்டதன்றோ.

அஞ்ஞானமாய விரவில் மோகப் பனிப்புகையால் நூல்வடிவ வொளியிழந்த நம்மை ஆற்றன்மிகுந்த கொடியராய விடயத் திருடர் அள விறந்தோ ரெஞ்ஞான்று மியாண்டு மிடர்ப்படுத்தி நம்பாலுறும் உயர்ச்சி மிக்க விவேக வாதனத்தைக் கொள்ளை கொள்கின்றன ரன்றோ, அக் கள்வரைக் கோறல் சுத்த தபோதனர்களாய அத்துவித சித்தாந்த தத்துவ வித்தினர்க்கன்றியெந்தவத்தார்க்கும் எப்போராலேனு மேலுங்கொலோ.

தமசு நசித்தன்றி யவரைக் கோறல் கூடாமையின் தமத்தைச் சமித்த தத்துவ வித்தினரே யவரைக் கோறல்கூடுமென்ப தொருதலை யேயாம்

(இன்னும் வரும்.)

வீர. சு.

சுஜன சம்வாதம்.

ஒரு நல்ல கப்பல்.
(முன் தொடர்ச்சி.)

கொற்றன். அன்ப, நல்லதிருக்கட்டும் உனக்கு வயது என்ன.

சாத்தன். அய்யனே, தங்களுக்குத் தெரியவில்லையோ.

கொற்றன். தெரியவில்லை சொல்வாய்.

சாத்தன். அய்யனே, எனக்கு ஐம்பது வயது இதுவரைக்கும் நடந்தது.

கொற்றன். அன்ப, அங்ஙனமாமேல் ஐம்பது வயதுக்குப் பூர்வம் நீயில்லையோ!

சாத்தன். ஆம் இல்லை.

கொற்றன். அன்ப, நன்றாய் ஆலோசித்து எனக்கு விடை பகர்வாய். அவசரம் ஒன்றும் இன்று.

சாத்தன். அய்யனே, நன்றாய்த்தான் ஆலோசித்து விடைபகர்ந்தேன்.

கொற்றன். அன்ப, நீ கூறுகின்றது அனுபவத்துக்கு மிகவும் விருத்தமா யிருக்கின்றது.

சாத்தன். அய்யனே, நான் ஒன்றும் விருத்தமாய்க் கூறினேனில்லே. உலகத்திலுள்ள அனுபவத்தைத்தான் கூறினேன்.

கோற்றன். அன்ப, நீ இங்ஙனம் கூறுவதால் அகிருதாப்பியாகமம், கிருத நாசம் ஆகிய இரு தோஷங்கள் பிராப்தமாகின்றனவே.

சாத்தன். அய்யனே, அகிருதாப்பியாகமம் என்பது என்னே? கிருத நாசம் என்பது என்னே? கிருபைசெய்து விடைபகர்தல் வேண்டும்.

கோற்றன். அன்ப, செய்யப்படாத புண்ணிய பாப கருமங்கட்குச் சுக துக்கமாகிய பயன்களின் பிராப்தி அகிருதாப்பியாகமம் எனப்படும். செய்யப்பட்ட புண்ணிய பாப கருமங்கள் சுக துக்கமாகிய பயன்களின் நுகர்ச்சி இன்றியே நாசமாதல் கிருதநாசமெனப்படும்.

சாத்தன். அய்யனே, நான் ஜனனமுடையவனென்று சொல்வதால் எங்ஙனம் அவ்விருவகைத் தோஷம் பிராப்தமாகும்? அதைத் தெளிவாகக் கூறுதல் வேண்டும்.

கோற்றன். அன்ப, இப்போது நூதனமாய் ஜனித்த ஆன்மா முன் எப் புண்ணிய பாப கருமமும் இயற்றியதன்று; ஆகையினுல் ஜன்மத்தின் பிறகு சுக துக்கமாகிய பலத்தின் பிராப்தி இன்றி இருத்தல்வேண்டும்; ஆனல் சுகதுக்கமாகிய பலத்தின் பிராப்தியோ கண்கூடாய் நிகழ்கின்றது. ஆகையினுல் அகிருதாப்பியாகம தோஷம் தெளிவாகக் காணப்படுகின்றதன்றே. ஆன்மாவை ஜனனமுடைதென்று ஒப்பினுல் மரணமுடையதென்றும் நியாயமாக ஒப்பவேண்டும். எனெனின் ஜநித்தது எதுவோ அது நாசமாகுமென்னும் நியமம் இருத்தலினுல். இங்ஙனம் ஆன்மாவை மரணமுடையதென்று கொள்ளுவோமாயின் கிருதநாசமென்னும் தோஷமும் ஸ்பஷ்டமாகவே காணப்படுகின்றதன்றே.

(இன்னும் வரும்.)

ஆ. செங்கல்வராய முதலியார்

காஞ்சிபுரம்.

மநீஷா பஞ்சகம்.

2-வது சுலோகம்.

ப்ரஹ்மைவாஹமிதம்ஜகச்சஸகலம்சிந்மாத்ரவிஸ்தாரிதம்
ஸர்வம்சைததவித்யயாத்ரிகுணயாஸேசம்மயாகல்பிதம்
இத்தம்யஸ்யத்ருடாமதிஸ்ஸுகதரேநித்யேபரேநிர்மலே
சண்டாலோஸ்துஸதுத்விஜோஸ்துகுருரித்யேஷாமநீஷாமம.

இ — ள். இங்ஙனம் காணப்படுவதும் சைதன்யத்தோடு கிறைந்துள்ளதுமான ஜீவேசுர ரூபமாகிய இந்தப் பிரபஞ்சமனைத்தும், சத்துவ குண ரஜோகுண தமோகுணங்களுள்ள அஞ்ஞான உபாதியினுல் என்னுல் கற்பிக்கப்பட்டவை; நானேவெனின், பரப்ரம்ம சொரூபனே; இவ்விதமாக எவனுக்கு சுக ரூபமானதும் நாசரகிதமானதுமாகிய நிர்மலமான பரப்ரம்மத்தினிடத்துப் புத்தி திடமாகவுள்ளதோ அவன் சண்டாளனுயினும் அல்லது பிராம்மணனுயினும் அவனே எனது குரு; இது எனது அபிப்பிராயம்.

எவனொருவன் நித்திய நிர்மலமான பரப்ரம்மம் நானென்று பாவித்து, காணப்படுகின்ற ஜீவேசுவராதி பேதப்பிரபஞ்சத்தை மாயாமயமென்று நினைக்கின்ருனே அவன் எவனுயினும் சரி அவனே எனது குருவென்று ஆசாரிய சங்கரர் அறைந்தனரென்க.

3-வது சுலோகம்.

சஸ்வந்நஸ்வரமேவவிஸ்வமகிலம்நிஸ்சித்யவாசாகுரோ
ர்நித்யம்ப்ரஹ்மநிரந்தரம்விம்ருசதாநிர்வ்யாஜசாந்தாத்மநா
பூதம்பாவிசதுஷ்க்ருதம்ப்ரதஹதாஸம்விந்மயேபாவகே
ப்ராரப்தாயஸமர்ப்பிதம்ஸ்வவபுரித்யேஷாமநீஷாமம.

இ — ள். பிரபஞ்ச மனைத்தையும் அடிக்கடி அநித்தியமாக நிச்சயித்துக்கொண்டு குருவினுடைய வாக்கியத்தினுல் எப்போதும் நாசமில்லாத பரப்ரம்மத்தை விசாரிக்கின்ற கபடமற்ற சாந்த மனசுள்ள ஞான ரூபமான அக்கினியில், பூர்வ ஜன்ம சம்பந்தமானதும் இனி வரப்போவதுமான பாப கர்மங்களைச் சுட்டெரிப்பவனிடத்து, சரீரம் பிராரப்தத்தின் பொருட்டுக் கொடுக்கப்பட்டது. (எனவே பிராரப்தமாத்திரம் அனுபவிப்பான்.) இதுவே எனது அபிப்பிராயம்.

எவன் சற்குரு கிருபையால் தனது எதார்த்த நிலையை அறிந்து, சஞ்சித ஆகாமிய கர்மங்களை ஞானுக்கினியால் எரித்து, சரீரத்தால் பிராரப்த கர்மத்தை. தக்கபட நியாயமாக அனுபவித்துக்கொண்டிருப்பானே அவனே எனது குருவென்று சங்காாசாரியர் சாற்றினரென்க.

பத்திராதிபர்.

பத்திரிகை புத்தக வரவு.

————)*(————

திருவாரூர் கமலாசனி (டிசம்பர் 1912) பத்திரிகையும், சென்னை சக்ரவர்த்தினி 1912-ம் ௵ டிசம்பர் மாதத்துப் பத்திரிகையும், இவ்வருடத்து ஜனவரி பிப்ரவரி மாதத்துப் பத்திரிகையும், காரைக்கால் காளமேகம் பிப்ரவரி மாதத்து 4-வது இலக்கப் பத்திரிகையும், காரைக்கால் செங்கதிரோன் பிப்ரவரி மாதத்து முதற் பக்ஷத்துப் பத்திரிகையும், இரண்டாம் பக்ஷத்துப் பத்திரிகையும், மதுரை பூரணசந்திரோதயம் பிப்ரவரி மாதத்துப் பத்திரிகையும், மார்ச்சு மாதத்துப் பத்திரிகையும் வரப்பெற்றனம். இவற்றை அன்புகூர்ந் தனுப்பிய பத்திராதிபர்கட்கும், 'பாஞ்சாலி சபதம்' அனுப்பிய அந்நூலாசிரியர்க்கும், தமது சபையின் 19, 20, 21-வது பிரசுரங்க ளனுப்பிய சென்னை விஸ்வ கர்ம குலோத்தாரண சபையார்க்கும் எமது நன்றியறிந்த வந்தனத்தை யனுப்புகின்றோம்.

ப - ர்.

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

நமது கலைமகள் வெண்டாமரை நான்காவதிதழும் வெளிப்பட்டு விட்டது. இதுவரையும் தமது சந்தாவை யனுப்பாமலிருப்பவர்கள் இது கண்டவுடனேனும் அனுப்பிவிடுவார்களென்று நம்புகின்றோம்.

தங்கள் விலாசத்தில் மாறுதல் நேரப்பெற்றவர்களும், பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்களும் உடனுக்குடன் தெரிவித்துவிடல்வேண்டும்.

ஏஜண்டுகள் தேவை.

கலைமகள் பத்திரிகைக்கு 100 சந்தாதாரர்களைச் சேர்க்கும் ஏஜண்டுகளுக்கு ரூ 10 கமிஷன் கொடுக்கப்படும். அங்ஙனம் சேர்க்கப்படும் சந்தாதாரர்கள் தமது சந்தாவை முற்பணமாக பத்திராதிபருக்கே நேராக அனுப்பிவிடவேண்டும்.

ப - ர்.

அநுதாபம்.

கலைமகள் கழகத்திற்கு அன்போடு இடம் உதவியவரும், ஷை சபை விஷயத்தில் மிகுந்த அக்கரை பாராட்டினவருமாகிய புதுவை ஸ்ரீமான் இராசப்ப — தெய்வசிகாமணி முதலியார் தேகவியோகமடைந்ததுபற்றிப் பெரிதும் விசனமுறுவதுமன்றி ஷையார் குடும்பத்தார்க்கும் எமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கலைமகள் கழகத்தார்.

விளம்பரம்.

இராஜ சுக மாத்திரை.

இம் மாத்திரை பழைய சக்ரவர்த்திகளால் ஆதரிக்கப்பெற்ற பெரிய ஹக்கீம்களுடைய அரிய முறையின்படி செய்யப்பட்டது. உலகத்தில் ஆண்தன்மை யிழந்து என்செய்வோமென்று வருந்துபவர்களுக்கு இது ஒரு பெரிய சஞ்சீவி. கனவான்களே! நீங்கள் நோயற்றுச் சுகத்தை யனுபவிக்க விரும்பினால் இராஜ சுக மாத்திரையை எடுத்துக்கொள்ளுங்கள். அது நல்ல பசிதீபன முண்டாக்கும். அஜீரணத்தைப் போக்கும். மலஜலப்பிரவர்த்தியைச் சுத்தப்படுத்தும். உடம்பு வலி, மார்பு வலி இன்னும் வாய்வு சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டிக்கும். குறிப்பாகச் சொல்லுகிறோம். நீங்கள் நீடித்த போகத்தை விரும்பினால் இராஜ சுக மாத்திரைக்கு இன்றைக்கே எழுதுங்கள்.

12 மாத்திரை அடங்கிய டப்பி 1இ ரூ 1 – 8 – 0

தாதுபுஷ்டி தைலம்.

இது ஆண்தன்மையை முழுதும் இழந்துபோனவர்களுக்கு அந்தச் சக்தியை மறுபடியும் உண்டாக்குகிறது. இத் தைலம் வயது சென்றவர்களையும் வாலிபராக்குமென்பது உபசாரமன்று. குணமில்லாவிடில் கொடுத்த பணம் திரும்ப வாபீஸ் செய்யப்படும்.

தோலா 1இ கிரயம் ரூ 4 – 0 – 0

ஒரு ஆளுக்கு அரைக்கால் தோலா போதுமானது.

தங்க சூர்ணம்.

இவ்வருமையான சூர்ணம் 12 வருஷத்து வெட்டையையும் பறக்கச் செய்துவிடும். தாதைக் கெட்டிப்படுத்தும். இடுப்பு வலி, முழங்கால் வலி, முதுகுவலி இன்னும் வெட்டையைப்பற்றிய வியாதிகளனைத்தையும் கண்டிக்கும்.

சீசா 1இ கிரயம் ரூ 1 – 8 – 0

ஆண்டவன் கிருபையால் எல்லா வியாதிகளுக்கும் நம்மிடத்தில் மருந்து கிடைக்கும். கடித மூலமாய் வியாதிகளை விபரமாக எழுதி யனுப்பினால் தகுந்த மருந்துகள் அனுப்பப்படும். மருந்தை உபயோகிக்க வேண்டிய முறைமுதலியன மருந்துடன்வரும் நோட்டீஸினால் தெரிந்து கொள்ளலாம்.

N. B.— எந்தப் பாஷையில் எழுதினாலும் பதில் தெரிவிப்போம்.

A. R. ஹக்கம், கோக்காரி, முஹல்லா

நெ. 9, பம்பாய்.